# இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை

## ஏப்ரல் - ஜூன் 2018




*விகல்ப ஊடகவியலாளரான இஷாரா டனசேக்கர 14 யூன் 2018ல் ஒரு நீதிமன்றச்சம்பவத்தை படம்பிடித்துக்கொண்டிருக்கும்போது ,ஒரு பௌரத்த தேரர் அதனைப் படம்பிடிக்கும் காடசி - அனுசரணை விக்கல்ப*


**INFORM** Human Rights Documentation Centre

www.ihrdc.wordpress.com informcolombo@gmail.com

## உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்


**அ. வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் செயலார்வலர்களுக்கு தடைகள் மற்றும் அச்சுறுத்தல்கள்**

**ஆ. ஊடகங்கள் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் பயமுறுத்தல்கள்**

**இ. காணாமலாக்கப்படல்கள் மீதான இயக்கங்கள் தொடர்பான அச்சுறுத்தல்கள் மற்றும் பயமுறுத்தல்கள்**

**ஈ. அச்சுறுத்தல்களினதும், பயமுறுத்தல்களினதும் வேறு வடிவங்கள்**


*இலங்கையின் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தவும் கண்காணிக்கவும் 1990,இல் இன்ஃபோர்ம் (INFORM) நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது .குறிப்பாக இன மோதல்களும் போரும் நிலவிய சூழலிலேயே இது உருவாக்கப்பட்டது . உள்ளூர் ,தேசிய ,சர்வதேச மட்டங்களில் எழுத்துமூலமும் வாய்மொழி மூலமும் இடையீடுகளை மேற்கொள்வதிலும் , அறிக்கைகளை வெளியிடுவதிலும் ,அது தன்னை ஈடுபடுத்திக் கொண்டது .படிப்படியாகவும் அடிக்கடியும் உரிமைகள் மீறப்படுகின்ற சமூகங்களை மையப்படுத்தி செயற்படுவதிலும் இன்ஃபோர்ம் தன்னை அர்ப்பணித்தது .தற்போது தேர்தல்களைக் கண்காணிப்பதிலும் கருத்துச் சுதந்திரத்திற்காகச் செயற்படுவதிலும் மனித உரிமைகள் காப்பாளர்களை மையப்படுத்தியும் இன்ஃபோர்ம் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது .இலங்கையில் கொழும்பை மையமாகக்கொண்டு இன்ஃபோர்ம் இயங்கி வருவதோடு ,உள்ளூர் செயற்பாட்டாளர்கள் ,குழுக்கள் வலைப்பின்னல்களுடனும் ,பிராந்திய )ஆசிய ( சர்வதேச மனித உரிமைகள் வலைப்பின்னல்களுடனும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது.*

# உள்ளடக்கம்


முறைமையியல் ....................................................................................4

நிறைவேற்றுச் சாராம்சம் ....................................................................................4

அ. வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் செயலார்வலர்களுக்கு தடைகள் மற்றும் அச்சுறுத்தல்கள் .........6

1. பாலியல் தொந்தரவினால் பாதிக்கப்பட்டவரைப் பாதுகாப்பதற்கு முயன்ற செயலார்வலர் புகையிரதத் திணைக்கள அலுவலரினால் அச்சுறுத்தப்பட்டார் ..............................6

2. யாழ்ப்பாணத்தில் போராட்டக்காரர்களைப் பொலிசார் புகைப்படமெடுத்தனர் ..............................7

3. கடற்படைப் புலனாய்வாளரினால் மீனவர் அச்சுறுத்தப்பட்டனர் ..............................7

4. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை நிருமாணிப்பது மீதான தடை ..............................8

5. பயங்கரவாதப் புலன்விசாரணைத் திணைக்களத்திற்கு உள்நாட்டுத் தமிழ் செயலார்வலர்கள் வரவழைக்கப்பட்டனர் ..............................8

ஆ. ஊடகங்கள் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் பயமுறுத்தல்கள் ..............................9

6. சமூக ஊடகங்களைத் தடைசெய்வது குறித்து ஜனாதிபதி எச்சரிக்கை ..............................9

7. யாழ்ப்பாணத்தில் இதழியலாளர் தாக்கப்பட்டார் ..............................10

8. முல்லைத்தீவில் இராணுவத்தினரால் இதழியலாளர்கள் புகைப்படமெடுக்கப்பட்டனர் ..............................10

9. முல்லைத்தீவில் இராணுவப் புலனாய்வாளர்களினால் இதழியலாளர்கள் விசாரிக்கப்பட்டனர்.11

10. யாழ்ப்பாணத்தில் இதழியலாளர் அச்சுறுத்தப்பட்டார் ..............................11

11. இதழியலாளரை ஆர்பிகோ பினான்ஸ் கம்பெனி அலுவலர் அச்சுறுத்தினார் ..............................11

12. கொழும்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு இதழியலாளர் வரவழைக்கப்பட்டார்...11

13. கொழும்பில் பெண் இதழியளாளரைப் பௌத்த மதகுருமார் அச்சுறுத்தினர் ..............................11

இ. காணாமலாக்கப்படல்கள் மீதான இயக்கங்கள் தொடர்பான அச்சுறுத்தல்கள் மற்றும் பயமுறுத்தல்கள் ..............................13

14. காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுக்காக முன்னிலையாகும் வழக்கறிஞர் மரண அச்சுறுத்தலை அறிக்கையிடுகின்றார் ..............................13

ஈ. அச்சுறுத்தல்களினதும், பயமுறுத்தல்களினதும் வேறு வடிவங்கள் ..............................16

## முறைமையியல்

2018 ஏப்ரலிலிருந்து ஜுன் வரை, இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை தொடர்பான சில குறிப்பிடத்தக்க சம்பவங்களின் பொதுவான போக்குகளையும், விபரங்களையும் இந்த அறிக்கை வழங்குகின்றது. சூழமைவினை நிறைவேற்றுச் சாராம்சம் விபரிப்பதுடன், தலைப்பு மீது அரசாங்கத்தினதும் மற்றும் வேறு தொடர்பான தரப்புக்களினதும் நடத்தை உட்பட போக்குகளையும், அத்துடன் சில பொதுவான கண்டுபிடிப்புக்களையும் பகுப்பாய்கின்றது. அடுத்து, 4 தலைப்புக்களின் கீழ் 18 குறிப்பான சம்பவங்கள் விபரிக்கப்படுகின்றன. INFORMக்கு அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் மற்றும் INFORM பணியாளரினதும், ஊடகங்களினதும் அவதானிப்புக்கள் மற்றும் அனுபவம் ஆகியன அறிக்கைக்கான தகவலின் மூலங்களாக விளங்குகின்றன.

## நிறைவேற்றுச் சாராம்சம்

வடக்கிலும், கிழக்கிலும் காணாமலாக்கப்பட்டோரின் தமிழ் குடும்பங்களினாலான தொடர்ச்சியான போராட்டங்கள் 365 நாட்கள் அடைந்த பின்னரும், காணாமல்போனோரின் அலுவலகத்தினால் உசாவுகைக் கூட்டங்கள் ஆரம்பித்த பின்னரும் காணாமலாக்கப்படுதல்கள் தொடர்ந்துமே சர்ச்சைக்குரிய மனித உரிமைகள் பிரச்சனையொன்றாக விளங்கின. காலத்தின் போது, கிழக்கில் பொலிசாரிடமிருந்து தடைகளைப் போராட்டம் நடத்திய குடும்பங்கள் முகங்கொடுத்ததுடன், காணாமலாக்கப்பட்டோரின் சில தமிழ்க் குடும்பங்கள் ஜெனீவாவில் ஐ.நா. கட்டிடத்தில் நடத்திய நிகழ்வொன்றும் குழப்பப்பட்டது. 2016இல் நீதிமன்ற வளாகத்தில் காணாமலாக்கப்பட்ட இதழியலாளர் ஒருவரின் மனைவியை அச்சுறுத்தியதற்காக குற்றவாளி என பௌத்த மதகுரு ஒருவர் தீர்ப்பளிக்கப்பட்டதன் காரணத்தின் எதிரொலியாக மரண அச்சுறுத்தல்களையும், வெறுப்பு உரைத் தாக்குதல்களையும் அவர் எதிர்கொண்டார். கடற்படை அலுவலர்கள் கைது செய்யப்பட்ட நீதிமன்ற வழக்கொன்றில் காணாமலாக்கப்பட்ட குடும்பங்களுக்காக முன்னிலையாகிய வழக்கறிஞர் ஒருவரும் அச்சுறுத்தும் தொலைபேசி அழைப்புக்கள் பற்றி அறிக்கையிட்டிருந்தார்.

இதழியலாளர்கள் தொடர்ந்துமே தாக்குதல்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் அத்துடன் தொந்தரவுகளுக்கும் முகங்கொடுத்தார்கள். வடக்கில் உடல்ரீதியிலான தாக்குதல்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும், புலன்விசாரணைக்கும் அத்துடன் அச்சுறுத்தலுக்கும் நான்கு தமிழ் இதழியலாளர்கள் உட்பட்டிருந்தனர். போராட்டம் ஒன்று குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற இன்னொரு வடக்கின் இதழியலாளர் தனியார் நிறுவனமொன்றின் அலுவலரினால் அச்சுறுத்தப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. கணனியில் பதிவேற்றப்பட்ட தகவலொன்றை மீள்-பதிவேற்றியமைக்காக பொலிசாரினால் விசாரணைக்காக கொழும்பைத் தளமாகக் கொண்ட இதழியலாளர் ஒருவர் வரவழைக்கப்பட்டதுடன், அது பரந்த பிரச்சாரத்தைப் பெற்ற பின்னர் வரவழைப்பு மீளப்பெறப்பட்டது. நீதிமன்ற வளாகத்திற்கு வெளியே தொந்தரவையும், அச்சுறுத்தல்களையும் கொழும்பைத் தளமாகக் கொண்ட இன்னோர் இதழியலாளர் அறிக்கையிட்டிருந்தார். சமூக ஊடகத் தடையொன்று பற்றி ஜனாதிபதி சிறிசேன பகிரங்கமாக எச்சரிக்கை செய்திருந்தார்.

'வைரலாகச்' சென்ற சம்பவமொன்றில், கடமையில் இருந்தவேளை, தமிழர்களுக்கு எதிராக 'வீடியோ' ஊடாக இனவாதரீதியாக வசைபாடிய புகையிரதத் திணைக்கள அலுவலர் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டார். தமிழ் பெண் ஒருவரைப் பாலியல்ரீதியாகத் தொந்தரவு செய்ததாகவும், அதில் தலையிடுவதற்கு முயற்சித்த ஒரு தமிழ் இதழியலாளரை/செயலாா்வலரை அச்சுறுத்தியதாகவும் அவர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். பாதிக்கப்பட்ட இருவரினதும் முறைப்பாடுகளைப் பொலிசார் பதிவு செய்வதற்கு முன் அவர்கள் அண்ணளவாக 5 மணித்தியாலங்கள் காத்திருக்கச்செய்யப்பட்டனர்.

காலத்தின் போது, யாழ்ப்பாணத்தில் உள்ள துணைத் தூதுவராலயத்திற்கு வெளியே இந்தியா, தமிழ்நாடு, தூத்துக்குடியில் சிவிலியன்களைக் கொலைசெய்தமைக்கு எதிராகப் போராட்டமொன்று நடைபெற்ற போது, பொலிசாரினாலும் அத்துடன் துணைத் தூதுவராலயத்தின் பாதுகாப்பு அலுவலர்களினாலும் புகைப்படமெடுப்பதன் மூலம் போராட்டக்காரர்களை அச்சுறுத்தும் செயல் தொடர்ந்தது. யுத்தத்தில் கொல்லப்பட்ட தமிழர்களுக்காக நினைவிடமொன்றின் நிருமாணம் நிறுத்தப்பட்ட அதேவேளை, யுத்தத்தில் இறந்தவர்களுக்கான நினைவுகூரும் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைக்காக அரசியல்/தொழிற்சங்கச் செயலாா்வலர் ஒருவர் வரவழைக்கப்பட்டார்.

ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட அலுவலரும் அத்துடன் அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றின் தலைவர் ஒருவரும் லஞ்சம் பெறுவது பற்றி முறைப்பாடு செய்த இந்திய முதலீட்டாளர் ஒருவர் மரண அச்சுறுத்தல்களைப் பெற்றது பற்றி பொலிசாருக்கு முறைப்பாடுசெய்துள்ளார்.

முழு அளவில், காணாமலாக்கப்படல்கள், ஊழல், வாழ்வாதாரம் மற்றும் பாலியல் தொந்தரவு போன்ற பலதரப்பட்ட பிரச்சனைகள் மீது அறிக்கையிட்டதுடன், பிரச்சாரம் நடத்தியதுமான இதழியலாளர்களுக்கும்,

செயலார்வலர்களுக்கும் எதிராக பொலிசாரினாலும், அரசாங்க அலுவலர்களினாலும் அத்துடன் தனிப்பட்ட நபர்களினாலும் நாட்டின் வேறுபட்ட பகுதிகளில் கருத்து வேறுபாட்டின் கிரமமான அடக்குமுறை காணப்பட்டது.

## அ. வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் செயலார்வலர்களுக்கு தடைகள் மற்றும் அச்சுறுத்தல்கள்

வடக்கிலும், கிழக்கிலும் உள்ள தமிழ் செயலார்வலர்கள் நாட்டின் எஞ்சிய பகுதிகளில் உள்ளவர்களை விட மிகவும் தீவிரமானதும், கிரமமானதுமான வழியில் தடைகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும், பயமுறுத்தல்களுக்கும் அத்துடன் கண்காணிப்புக்கும் தொடர்ந்துமே முகங்கொடுக்கின்றனர். கருத்துச் சுதந்திரமும், ஒன்றுகூடுவதற்கான உரிமைகளும் அடிக்கடி மீறப்பட்டன. தொந்தரவு, வாழ்வாதாரங்கள், யுத்தத்தில் இறந்தவர்களை நினைவுகூருதல் ஆகியவற்றையும், இந்தியாவில் கொலைகள் குறித்து ஒருமைப்பாட்டிலான போராட்டங்களையும் தடுக்கும் போது செயலார்வலர்களை அடக்கியதன் உதாரணங்கள் கீழேயுள்ளன.

### 1. பாலியல் தொந்தரவினால் பாதிக்கப்பட்டவரைப் பாதுகாப்பதற்கு முயன்ற செயலார்வலர் புகையிரதத் திணைக்கள அலுவலரினால் அச்சுறுத்தப்பட்டார்



*செயலார்வலரையும், பெண்ணையும் சந்தேகிக்கப்பட்ட ஆசனச்சீட்டுப் பரிசோதகர் அச்சுறுத்துவதுடன், அவர்கள் பற்றி இனவாதக் கருத்துக்களையும் வெளியிடுகின்றார் – புகைப்பட அனுசரணை: http://www.jdslanka.org)*

இலங்கையின் புகையிரதத் திணைக்களத்தின் ஆசனச்சீட்டுப் பரிசோதகர் ஒருவர் யாழ்ப்பாணத்திற்குச் சென்ற புகையிரதம் ஒன்றில் வைத்து பெண் ஒருவரை பாலியல்ரீதியாகத் தொந்தரவு செய்ததுடன், இனவாதரீதியாக அவரை வசைபாடியுமுள்ளார். புகையிரதத்தில் ஒரு செயலார்வலர்/இதழியலாளர் தலையிட்ட போது, அவரது 'சேர்ட்' பட்டியைப் பிடித்து அவரது கழுத்தை இறுக்கிய புகையிரத அலுவலர், அதிகளவு மூர்க்கத்தனமாகவும், இழிவுபடுத்துவதாகவும் நடந்து கொண்டார். அடுத்த நாள், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்வதற்கு அவர்கள் முயன்ற போது, தமிழைப் பேசுவோரைப் பெரும்பான்மையாகக் கொண்டதாக யாழ்ப்பாணம் விளங்குகின்ற போதிலும், தமிழ் பேசும் பொலிஸ் அலவலர் இல்லாததைக் குறிப்பிட்டு, அவர்களை ஐந்து மணித்தியாலங்களுக்கு காத்திருக்கச்செய்யப்பட்டனர். சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் ஒருவருடன் தனிப்பட்ட முறையில் தமிழ் அமைச்சர் ஒருவர் தலையிட்டதன் பின்னர் மட்டுமே முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.[1, 2]

---

[1] https://twitter.com/uthayashalin/status/993460135488995328 (கடைசியாக ஜூலை 5 அன்று அடையப்பட்டது)
[2] http://www.jdslanka.org/index.php/news-features/human-rights/775-tamils-forced-to-wait-half-a-day-to-lodge-complaint-on-sexual-abuse (கடைசியாக ஒகஸ்ட் 5 அன்று அடையப்பட்டது)

## 2. யாழ்ப்பாணத்தில் போராட்டக்காரர்களைப் பொலிசார் புகைப்படமெடுத்தனர்



*(பிரதிமை - போராட்டக்காரர்களைப் பொலிஸ் அலுவலர் ஒருவர் புகைப்படமெடுக்கிறார், புகைப்பட அனுசரணை - Tamil Guardian)*

இந்தியா, தமிழ்நாடு, தூத்துக்குடியில் சிவிலியன்களைச் சுட்டதற்கு எதிராக ஜூன் 1 அன்று யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத் தூதுவராலயத்தின் முன்னால் போராட்டமொன்றில் போராட்டக்காரர்கள் ஈடுபட்டிருந்தனர். அவ்வேளையில், இலங்கையின் பொலிசாரினாலும், துணைத் தூதுவராலயத்தின் பாதுகாப்பு அலுவலர்களினாலும் தாம் அனாவசியமாகப் புகைப்படம் பிடிக்கப்பட்டதாக அவர்கள் வலியுறுத்துகின்றனர்.[3]

## 3. கடற்படைப் புலனாய்வாளரினால் மீனவர் அச்சுறுத்தப்பட்டனர்

கடல் வெள்ளரிக்காய்களின் செய்கைக்கு எதிராக மே 27 அன்று தம்மால் நடத்தப்பட்ட போராட்டமொன்றின் காரணமாக, கடற்படைப் புலனாய்வு அலுவலர்களினால் தாம் அச்சுறுத்தப்பட்டதாக வடமராட்சியின் மீனவர்களைக் கொண்ட குழு தெரிவித்தது. வட மேல் மாகாணத்திலிருந்து தாழையடி, மருதங்கேணி மற்றும் செம்பியன்பற்று ஆகியவற்றின் கரையோரங்கள் மீது பருவகால மீனவர்களினால் செய்கை மேற்கொள்ளப்பட்டதாகவும், இதன் காரணமாக, தமது வாழ்வாதாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். கடற்படைப் புலனாய்வு அலுவலர்களிடமிருந்து மரண அச்சுறுத்தல்களையும், அச்சுறுத்தும் தொலைபேசி அழைப்புக்களையும் தாம் பெற்றதாகவும், அவர்களை ஆட்கடத்துவதுடன், தடுத்துவைக்கப்பட்டவர்களின் சித்திரவதைக்குப் பிரசித்தமான சி.ஐ.டி.இன் (குற்றவியல் புலன்விசாரணைத் திணைக்களம்) தளமான “4ஆவது தளத்தைப் பார்ப்பதற்கு” அவர்கள் விரும்புகிறார்களா எனக் கடற்படைப் புலனாய்வு அலுவலர்கள் கேட்டதாகவும் போராட்டத்தின் ஒழுங்கமைப்பாளர்கள் வலியுறுத்தினர்.[4]

---

[3] https://www.tamilguardian.com/content/sri-lankan-police-photograph-tamils-demonstrating-against-thoothukodi-shootings (கடைசியாக ஒகஸ்ட் 5 அன்று அடையப்பட்டது)

[4] https://www.tamilguardian.com/content/vadamarachchi-fishermen-threatened-sri-lanka-navy-intelligence-after-protest (கடைசியாக ஒகஸ்ட் 1 அன்று அடையப்பட்டது)

### 4. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை நிருமாணிப்பது மீதான தடை

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் (பெருமளவு மரணங்களுடன் யுத்தம் முடிவடைந்த கிராமம்) நினைவிடமொன்றை நிருமாணிப்பது மீதான தடையொன்றைப் பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவும், உயர் கல்வி அமைச்சும் சுமத்தியுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில், விசேடமாக முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட தமிழர்களை நினைவுகூருவதற்காக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களினால் நிருமாணம் திட்டமிடப்பட்டிருந்தது.[5]

### 5. பயங்கரவாதப் புலன்விசாரணைத் திணைக்களத்திற்கு உள்நாட்டுத் தமிழ் செயலார்வலர்கள் வரவழைக்கப்பட்டனர்




*(பிரதிமை - பொலிசாரினால் கே.ஜெயக்குமாருக்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிவித்தல் - புகைப்பட அனுசரணை: Tamil Guardian)*

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உள்நாட்டுத் தலைவரும், கிளிநொச்சியில் தொழிற்சங்கத் தலைவருமான கே.ஜெயக்குமார் மே 22 அன்று கொழும்பில் உள்ள பயங்கரவாதப் புலன்விசாரணைத் திணைக்களத்தின் தலைமையலுவலகத்திற்கு வருமாறு அழைக்கப்பட்டார். மே 18 அன்று கிளிநொச்சியில் முள்ளிவாய்க்கால் கொலைகளுக்கான நினைவுதின நிகழ்ச்சியொன்றுக்கு அவர் தலைமைவகித்தார் என்பதே அவர் அழைக்கப்பட்டதற்கு பின்னாலுள்ள காரணமாகும். 2009க்கு முன்னர் கே.ஜெயக்குமார் ஒரு எல்.ரி.ரி.ஈ. போராளி என்பதுடன், அரசாங்கத்தினால் நடத்தப்பட்ட புனர்வாழ்வுத் திட்டமொன்றை மேற்கொண்ட பின்னர் 2010இல் விடுவிக்கப்பட்டார். அவர் மூன்று பிள்ளைகளின் தந்தை என்பதுடன், வாழ்வாதாரத்திற்காக உள்ளூர் சந்தையில் மரக்கறி கூடமொன்றை நடத்துகின்றார்.[6]

[5] https://www.tamilguardian.com/content/sri-lankan-government-bans-construction-mullivaikkal-memorial-jaffna-uni (கடைசியாக ஜூலை 30 அன்று அடையப்பட்டது)
[6] https://www.tamilguardian.com/content/former-ltte-cadre-called-tid-inquiry-after-chairing-mullivaikkal-event (கடைசியாக ஜூலை 28 அன்று அடையப்பட்டது)

## ஆ. ஊடகங்கள் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் பயமுறுத்தல்கள்

இதழியலாளர்களுக்கு எதிராக அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்கள் ஆகியன தொடர்ந்ததுடன், வடக்கிலிருந்து பெரிதுமே இராணுவத்திற்குச் சாட்டப்படக்கூடிய குறைந்தபட்சம் 5 சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டன. கொழும்பைச் சுற்றியும் இரு சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டதுடன், இதில் ஒன்று மிதவாதக் குழுவான பொது பல சேனவினால் (பௌத்த சக்திப் படை) மேற்கொள்ளப்பட்டது. ஏனைய விடயத்தில், நன்கு அறியப்பட்ட இதழியலாளர் ஒருவர் குற்றவியல் புலன்விசாரணைத் திணைக்களத்தினால் வரவழைக்கப்பட்டார். ஆனால், அது பரந்த பிரச்சாரத்தைப் பெற்ற பின்னர், அழைப்பு மீளப்பெறப்பட்டது. மறுதலையிலான தாக்கத்தைச் சமூக ஊடகங்கள் கொண்டிருந்தால், அவை தடைசெய்யப்படும் என பகிரங்க அச்சுறுத்தலொன்றை ஜனாதிபதி விடுத்தார். இதழியலாளர்களினதும், ஊடகங்ளினதும் மீதான தாக்குதல்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் மற்றும் பயமுறுத்தலுக்குமான சில உதாரணங்கள் கீழேயுள்ளன:

### 6. சமூக ஊடகங்களைத் தடைசெய்வது குறித்து ஜனாதிபதி எச்சரிக்கை



*(பிரதிமை - ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, புகைப்பட அனுசரணை- பீ.பீ.சீ.சிங்களம்)*




*(பிரதிமை –ஜனவரி 2016ல் அஸாம் அமீன் ஜனாதிபதியை நேர் காண்கிறார்- புகைப்பட அனுசரணை பீ.பீ.சீ.சிங்களம்)*

தேசியப் பாதுகாப்புக்கும், இனத்துவ ஒற்றுமைக்கும் அத்துடன் குடும்பமொன்றின் நேர்மைக்கும் கெடுதலை சமூக ஊடகங்கள் ஏற்படுத்தினால் சில சமூக ஊடகத் தளங்களைத் தடை செய்வதற்கு தான் தயார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியதாக ஊடகங்கள் குறிப்பிட்டிருந்தன. சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது மற்றும் தடைசெய்வது பற்றி அமெரிக்க நிறுவனமொன்றுடன் ஏற்கனவே கலந்துரையாடியுள்ளதாகவும், யாராகிலும் எதிர்ப்புத் தெரிவித்தாலும் அதற்கு அக்கறையின்றி, சமூக ஊடகங்களின் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு தான் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்திருந்தார்.[7],[8]

### 7. யாழ்ப்பாணத்தில் இதழியலாளர் தாக்கப்பட்டார்

“காலைக்கதிர்” என்ற செய்திப்பத்திரிகையின் பிராந்திய இதழியலாளர் ஒருவரான செல்வராஜா ராஜேந்திரம் மே 28 அன்று காலை 4 மணிக்கு வாள்களுடன் மோட்டார் பைச்சிள்களில் வந்த முகமூடி அணிந்தவர்களால் யாழ்ப்பாணத்தில் உள்ள கொழும்புத்துறையில் தாக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர் மூன்று பிள்ளைகளின் தந்தையான 56 வயதானவராவார். அவர் செய்திப்பத்திரிகையின் விநியோக முகாமையாளராகவும் பணியாற்றுகின்றார். தாக்குதலின் பின்னர், கடுமையான காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இதழியலாளர் அனுமதிக்கப்பட்டதுடன், பொலிசார் புலன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.[9]

### 8. முல்லைத்தீவில் இராணுவத்தினரால் இதழியலாளர்கள் புகைப்படமெடுக்கப்பட்டனர்

முல்லைத்தீவில் தொடர்ச்சியான நில அபகரிப்பு மீதான போராட்டம் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற இதழியலாளர்களைக் கொண்ட குழுவொன்று மே 24 அன்று சாதாரண உடைகளில் வந்த இராணுவத்தினரால் புகைப்படமெடுக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. பகுதியில் உள்ளூர் அரசியல்வாதி ஒருவருடன் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானுக்கு இதழியலாளர்கள் பிரயாணம் செய்துள்ளதுடன், அவர்கள் நில அபகரிப்பின் பிரச்சனைகள் மீது இராணுவ அலுவலர்களுடன் சந்திப்பொன்றையும் நடத்தியிருந்தனர்.[10]

---

[7] http://www.dailymirror.lk/article/I-was-the-most-affected-social-media-victim-President-150689.html (கடைசியாக ஜூலை 31 அன்று அடையப்பட்டது)
[8] http://www.dailymirror.lk/article/Social-media-put-on-red-alert-151009.html (கடைசியாக ஜூலை 31 அன்று அடையப்பட்டது)
[9] https://www.tamilguardian.com/content/journalist-attacked-sword-jaffna (கடைசியாக ஜூலை 9 அன்று அடையப்பட்டது)
[10] https://www.tamilguardian.com/content/military-photograph-journalists-reporting-mullaitivu-land-grabs (கடைசியாக ஜூலை 12 அன்று அடையப்பட்டது)

### 9. முல்லைத்தீவில் இராணுவப் புலனாய்வாளர்களினால் இதழியலாளர்கள் விசாரிக்கப்பட்டனர்

ஜூன் 18 அன்று, முல்லைத்தீவில் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களினால் நடத்தப்பட்ட போராட்டம் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற இதழியலாளர்களைக் கொண்ட குழுவொன்று, சாதாரண உடைகளிலான இராணுவத்தினரால் விசாரிக்கப்பட்டது. ஓர் இதழியலாளரினால் கணனியில் பதிவேற்றப்பட்டுள்ளவாறு, ஏழு இராணுவப் புலனாய்வாளர்களினால் அவர்கள் அணுகப்பட்டு, விசாரிக்கப்பட்டதுடன், அவர்கள் இதழியலாளர்களைச் சுற்றி பயமுறுத்தும் விதத்தில் நின்றதுடன், அவர்களைப் புகைப்படமும் எடுத்தனர்.[11]

### 10. யாழ்ப்பாணத்தில் இதழியலாளர் அச்சுறுத்தப்பட்டார்

தமிழ் இதழியலாளரான வசந்தரூபன் யாழ்ப்பாணத்தில் அச்சுறுத்தப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. இதழியலாளரை நோக்கி முகமூடியினால் தனது முகத்தை மூடியிருந்த அடையாளங்காணமுடியாத நபர் துப்பாக்கியொன்றைக் குறிபார்த்ததுடன், இணைய தளமொன்றுக்கு அவரால் எழுதப்பட்ட கட்டுரையொன்றை அகற்றுமாறு இதழியலாளரை அவர் அச்சுறுத்தினார்.[12]

### 11. இதழியலாளரை ஆர்பிகோ பினான்ஸ் கம்பெனி அலுவலர் அச்சுறுத்தினார்

தமது கடன்களைத் தள்ளுபடி செய்யுமாறு நுண்-நிதி நிறுவனங்களை வலியுறுத்தி வட கிழக்கு மாவட்டமான முல்லைத்தீவில் நூற்றுக்கணக்கான பெண்களின் போராட்டங்கள் பற்றிய செய்தியை வெளியிட்டதற்காக உள்ளூர் அரசியல்வாதியாகவும் விளங்கும் ஆர்பிகோ பினான்ஸ் கம்பெனியின் முகாமையாளரினால் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக வடக்கின் சுதந்திரமாக இயங்கும் இதழியலாளரான கணபதிப்பிள்ளை குமணன் அறிக்கையிட்டுள்ளார். பெருமளவு மரணங்களுக்கு இட்டுச்சென்றுள்ள தாங்கிக்கொள்ள முடியாத கடன்களுக்கு எதிராக வடக்கு பூராகவும் போராட்டமொன்றின் அங்கமே பேரணியாகும். அச்சுறுத்தும் தன்மையொன்றில் கடனாளிகளான போராட்டக்காரர்களை ஆர்பிகோ பினான்ஸ் கம்பெனியின் அலுவலர்கள் எவ்வாறு படமாக்கிக் கொண்டிருந்தனர் என இதழியலாளர் குமணன் அறிக்கையிட்டிருந்தார்.[13]

### 12. கொழும்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு இதழியலாளர் வரவழைக்கப்பட்டார்

*(பிரதிமை - அஸாம் அசீஸ், ஜனாதிபதியை நேர் காண்கின்றார் புகைப்பட அனுசரணை:டீடீஊ சிங்களம்)*

வாக்குமூலமொன்றைப் பதிவுசெய்வதற்காக அடுத்த நாள் குற்றவியல் புலன்விசாரணத் திணைக்களத்திற்கு வருமாறு மே 9 அன்று BBC இதழியலாளர் அஸாம் அமீன் வரவழைக்கப்பட்டிருந்தார். ஜனாதிபதி அலுவலக ஊடகப் பிரிவின் பதிவேற்றக் கணக்கிலிருந்து பதிவேற்றம் ஒன்று குறித்த அவரது மீள்-பதிவேற்றம் மீது விசாரிப்பதற்கே அமீன் வரவழைக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து ஜனாதிபதி அலுவலகத்தின் ஊடகப் பிரிவு பதிவேற்றத்தை அகற்றிவிட்டு, தெளிவுபடுத்தலொன்றை விடுத்திருந்தது[14].

### 13. கொழும்பில் பெண் இதழியளாளரைப் பௌத்த மதகுருமார் அச்சுறுத்தினர்

[11] https://mobile.twitter.com/uthayashalin/status/1008771592023732224 (கடைசியாக ஜூலை 28 அன்று அடையப்பட்டது)
[12] https://mobile.twitter.com/TamilGuardian/status/1008255058088210432 (கடைசியாக ஜூலை 31 அன்று அடையப்பட்டது)
[13] http://www.jdslanka.org/index.php/news-features/media/786-srilanka-journalists-intimidated (கடைசியாக ஒகஸ்ட் 5 அன்று அடையப்பட்டது)

[14] http://colombogazette.com/2018/05/09/cid-summons-bbc-journalist-azzam-ameen-over-tweet/ (கடைசியாக 9 ஜூலை அன்று அடையப்பட்டது)




*(விகல்ப ஊடகவியலாளரான இஷாரா டனசேக்கர 14 ஜூன் 2018ல் ஒரு நீதிமன்றச்சம்பவத்தை படம்பிடித்துக்கொண்டிருக்கும்போது ,ஒரு பௌரத்த தேரர் அதனைப் படம்பிடிக்கும் காட்சி - புகைப்பட அனுசரணை: www.jdslanka.org)*

ஜூன் 14 அன்று ஹோமாகம நீதிமன்ற வளாகத்திற்கு வெளியே பௌத்த மதகுருமார்களைக் கொண்ட குழுவினால் vikalpa.orgஇன் இணை ஆசிரியர் இஷாரா தனசேகர தொந்தரவுசெய்யப்பட்டார். பொது பலசேனவின் (BBS - பௌத்த சக்திப் படை) உறுப்பினர்களாவும், ஆதரவாளர்களாகவும் மதகுருமார்கள் அடையாளங்காணப்பட்டதுடன், நீதிமன்ற வளாகத்தின் உள்ளே காணாமலாக்கப்பட்ட இதழியலாளரின் மனைவியை அச்சுறுத்தியதிற்காக குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட வேளை, BBS தலைவர் கலபொத-அத்தே ஞானசாரரைப் புகைப்படமெடுப்பதற்கு தன்னை அவர் நிலைப்படுத்திய வேளை, அவரை அவர்கள் அச்சுறுத்தியதுடன், தொந்தரவும் செய்தனர். குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட மதகுருவைப் புகைப்படமெடுப்பதற்கு காத்திருந்த பெருமளவு வேறு இதழியலாளர்கள் மத்தியில் இஷாரா விளங்கியதுடன், ஆனால் பாதிக்கப்பட்டவரான சந்தியா எக்னெலிகொடவுக்கு அனுதாபத்தை கொண்டவராக அவர் அடையாளங்காணப்பட்டதனால் இலக்குப்படுத்தப்பட்டிருந்தார். "ஹோமாகம நீதவான் நீதிமன்றத்திற்கு வெளியே @vikalpavoicesக்காக செய்தியொன்றைச் சேகரித்த போது, ஞானசாரவின் குண்டர் மதகுரு ஆதரவாளர்களால் நான் இன்று அச்சுறுத்தப்பட்டதுடன், தொந்தரவும் செய்யப்பட்டேன்" என புகைப்படமொன்றை இன்னொரு மதகுரு எடுக்கும் புகைப்படத்துடன் இஷாரா தனசேகர பதிவேற்றியிருந்தார்[15].

[15] http://www.jdslanka.org/index.php/news-features/media/786-srilanka-journalists-intimidated (கடைசியாக ஓகஸ்ட் 5 அன்று அடையப்பட்டது)

## இ. காணாமலாக்கப்படல்கள் மீதான இயக்கங்கள் தொடர்பான அச்சுறுத்தல்கள் மற்றும் பயமுறுத்தல்கள்

அவை நீதிமன்ற வழக்குகளாக, வீதிப் போராட்டங்களாக அல்லது ஜெனீவாவில் ஐ.நா.இல் கூட்டமாக இருந்தாலும் காணாமலாக்கப்படல்களுக்கு எதிரான இயக்கங்கள் சில தரப்புக்களின் விசேடமாக இராணுவத்திலிருந்து சந்தேக நபர்களின்/குற்றவாளிகளின் மத்தியில் கோபத்தைத் தோற்றுவித்தன.

### 14. காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுக்காக முன்னிலையாகும் வழக்கறிஞர் மரண அச்சுறுத்தலை அறிக்கையிடுகின்றார்




*(பிரதிமை - கொழும்பு கோட்டை நீதவான் மன்றின் வளாகத்தின் முன் ஊடகங்களுடன் வழக்கறிஞர் அச்சலா செனிவிரத்ன (வலது) உரையாற்றுகின்றார். அவரது பக்கத்தில் காணாமலாக்கப்பட்ட ஒருவரின் தாய் காணப்படுகின்றார். புகைப்பட அனுசரணை: www.srilankamirror.com)*

முன்னைய அரசாங்கத்தின் கீழ் கொழும்பிலும், அயல்புறங்களிலும் ஆட்கடத்தப்பட்ட 11 நபர்களுக்காக முன்னிலையாகியிருந்த பெண் வழக்கறிஞர் அச்சலா செனிவிரத்ன நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ள அச்சுறுத்துகின்ற தொலைபேசி அழைப்புக்கள் பற்றி ஊடகங்களிடம் கூறியிருந்தார். இந்த வழக்கில் பத்து இலங்கைக் கடற்படை அலுவலர்கள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர் என்பதுடன், காணாமல்போன 11 சிவிலியன்கள் குறித்து பூர்வாங்க விசாரணைகளைக் கொழும்பு கோட்டை நீதவான் மன்று நடத்துகின்றது[16].

[16] https://www.srilankamirror.com/news/8333-lawyer-for-missing-persons-receives-threatning-calls-video (கடைசியாக ஜூலை 13 அன்று அடையப்பட்டது)

### 15. காணாமலாக்கப்பட்ட இதழியலாளரின் மனைவி சந்தியா எக்னெலிகொடவுக்கு எதிரான மரண அச்சுறுத்தல்கள் மற்றும் வெறுப்புரை




*(பிரதிமை- உலப்பனே சுமங்கள தேரர் என்ற பௌத்த மதகுருவின் தலைமையில் தன்னை தூற்றுவதற்கும் அச்சுறுத்துவதற்கும் ஒரு சமூக ஊடக பரப்புரை வலைத்தளத் திட்டம் இடம்பெறுவதாக,ஊடகவியலாளர் மாநாட்டில் சந்தியா எக்நெலிகொட குறிப்பிடுகின்றார்)*

காணாமலாக்கப்பட்ட இதழியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவை குற்றவியல்ரீதியாக அச்சுறுத்தியதற்காக ஆறு மாதக் கடுங்காவல் சிறைத்தண்டனையை மதகுருவொருவர் பெற்றார். இதன் பின்னர், சமூக ஊடகங்கள் ஊடாக தொடர்ச்சியான மரண அச்சுறுத்தல்களையும், வசைபாட்டினையும் அவர் அடைந்துள்ளார். பொலிசின் குற்றவியல் புலன்விசாரணைத் திணைக்களத்திற்கு சந்தியா முறைப்பாடு செய்துள்ளதுடன், சமூக ஊடகங்கள் ஊடாக பெருமளவு அச்சுறுத்தல்களும், தொந்தரவுகளும் வந்துள்ளதனால், இலங்கை தொலைதொடர்பு ஒழுங்காக்கல் ஆணைக்குழுவுக்கு தான் முறைப்பாடு செய்யவுள்ளதாக அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். பிரகீத்தின் காணாமலாக்கல் குறித்து உண்மையையும், நீதியையும் நாட்டுவதற்கான அவரது போராட்டங்களில் தேசிய மற்றும் சர்வதேசப் பாராட்டுதல்களை சந்தியா வென்றுள்ளார்[17] [18].

### 16. மட்டக்களப்பில் காணாமலாக்கல்களுக்காகப் போராடிய தமிழர்களுக்கு பொலிஸ் தொந்தரவு

2018 மே 7 அன்று மட்டக்களப்பில் இலங்கையின் ஜனாதிபதியின் மே தின நிகழ்ச்சிக்கு எதிராக காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் போராட்டம் நடத்துவதை நிறுத்துவதற்கு இலங்கையின் பொலிஸ் அலுவலர்கள் முயற்சித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆனால், போராட்டத்தைக் குடும்பங்கள் நடத்தியதுடன், தொடர்ந்துமே கணக்கிடப்படாமல் உள்ள ஆயிரக்கணக்கானோருக்கு பதில்களை வழங்குவதற்கு அரசாங்கம் தவறியுள்ளதைக் கண்டித்ததுடன், பொறுப்புக்கூறுதலை வழங்குவதற்கான பொறிமுறையொன்றாக காணாமல்போனோரின் அலுவலகம் வழங்காததையிட்டு அதை விமர்சித்தனர்[19].

---

[17] https://www.ucanews.com/news/wife-of-missing-sri-lankan-journalist-gets-death-threats/82657 (கடைசியாக ஜூலை 14 அன்று அடையப்பட்டது)

[18] http://www.ifj.org/nc/news-single-view/backpid/1/article/wife-of-missing-sri-lankan-journalist-receives-threats/ (கடைசியாக ஜூலை 14 அன்று அடையப்பட்டது)

[19] https://www.tamilguardian.com/content/police-harass-tamils-protesting-against-sirisenas-may-day-rally-batticaloa (கடைசியாக ஜூலை 4 அன்று அடையப்பட்டது)



*(பிரதிமை - போராட்டத்தை நிறுத்துவதற்கு பொலிஸ் அலுவலர்கள் முயல்கின்றனர், புகைப்பட அனுசரணை: Tamil Guardian)*

### 17. ஜெனீவாவில் ஐ.நா.இல் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களிலான நிகழ்ச்சியொன்று குழப்பப்பட்டது

ஜூன் 25 அன்று, ஜெனீவாவில் ஐக்கிய நாடுகளில் “பக்க நிகழ்ச்சி” ஒன்று சிங்களத்தைப் பேசும் நபர்களைக் கொண்ட குழுவொன்றினால் குழப்பப்பட்டது. இதில் பேச்சாளர்களாக காணாமலாக்கப்பட்டோரின் பெருமளவு தமிழ்க் குடும்பத்தினர் விளங்கியதுடன், இலங்கையில் சார்த்துரைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள் பற்றிய திரைபடமும் திரையிடப்பட்டது. இவ்வகையான விடயங்களைச் சாதாரண சிங்களவர்கள் செய்யமாட்டார்கள் என்பதனால் அவர்கள் இராணுவத் தொடர்பினைக் கொண்டிருப்பவர்கள் என தாம் சந்தேகிப்பதாக பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். குழப்பத்தின் பின்னர், தலைமை மேடையில் குடும்ப உறுப்பினர்கள் தொடர்ந்தும் இருந்ததுடன், ஒருவர் மயக்கமுமடைந்தார். இதில் ஐ.நா. பாதுகாப்பு அலுவலர்கள் தலையிட வேண்டியிருந்ததுடன், குழப்பம் விளைவித்தவர்களை கட்டிடத்திற்கு வெளியே அழைத்துச் சென்றதுடன், மயக்கமடைந்தவருக்கு மருத்துவ உதவிக்கான வசதியையும் வழங்கினர்.

*மூலங்கள்: நேரடி சாட்சிகள் மற்றும் INFORMக்கு பாதிக்கப்பட்டோரின் சான்றுரைகள்*

## ஈ. அச்சுறுத்தல்களினதும், பயமுறுத்தல்களினதும் வேறு வடிவங்கள்

### 18. ஒரு தாபனத்தின் தவறுகளை வெளிப்படுத்திய இந்திய முதலீட்டாளருக்கு மரண அச்சுறுத்தல்



*(பிரதிமை - கைது செய்யப்பட்ட அரச அதிகாரிகள் சிறைச்சாலை அலுவலர்களினால் விளக்கமறியலுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றார்கள், புகைப்பட அனுசரணை: www.dailynews.lk)*

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணியாட் பிரதம அதிகாரி ஐ.கே.மஹாநாம மற்றும் இலங்கை மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பி.திசநாயக்க ஆகியோர் தன்னிடம் இலஞ்சம் ஒன்றைப் பெற்றுக்கொண்டதாக முறைப்பாட்டைச் செய்த இந்திய முதலீட்டாளர் ஒருவர் தனக்கு மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாக பொலிசுக்கு அறிவித்துள்ளார். கொழும்பு 7இல் உள்ள இந்திய வர்த்தகரின் அலுவலகத்திற்கு அடையாளங் காணப்படாத நபர் ஒருவர் வருகைதந்து, மரண அச்சுறுத்தலை அவருக்கு விடுக்கும் இரு பக்கக் கடிதமொன்றை வரவேற்பாளரிடம் வழங்கியுள்ளதுடன், வரவேற்பாளரையும் அச்சுறுத்தியுள்ளார்[20].

[20] http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=184374 (கடைசியாக ஒகஸ்ட் 5 அன்று அடையப்பட்டது)